சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

முன்னிலை: உயர்திரு.**M. தனபால்.B.A, B.L.,**

சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.163/2024**

**TNDG19000138 2023**

1. அம்மாபட்டி
2. முருகானந்தம்
3. விவேகானந்தி ... வாதிகள்

/ எதிர் /

1. பழனிச்சாமி
2. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்
3. வருவாய் வட்டாட்சியர், ஒட்டன்சத்திரம்
4. வருவாய் கோட்டாட்சியர், பழனி ... பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கு என் முன்னர் 03.12.2024ம் தேதியன்று விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பெருமாள் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் யாரும் முன்னைிலையாகாமலும், 2 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் G.P அவர்கள் முன்னிலையாகியும், வாதியின் வழக்கு இறுதி வசாரணைக்கு வந்தநிலையில் நடவடிக்கை ஏதும் எடுக்காததால் வாதிகளை அழைத்தும் ஆஜரின்மையால் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கலான.

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்து விபரத்தில் அயிட்டம் 1 சொத்து மலையப்பன் பெயரிலுள்ள பட்டாப்படி வாதிகளுக்கு தனித்துப் பாத்தியப்பட்டவை என விளம்புகை வழங்கக்கோரியும், ( அதன் தொடர் பரிகாரமாக) தாவா சொத்து விபரத்தில் அயிட்டம் 1 சொத்தில் 1ம் பிரதிவாதியோ அவரை சார்ந்தவர்களோ எவ்வகையிலும் இடையூறு செய்ய கூடாது என ஒரு நிலைக்கால உறுத்துக்கட்டளை பறிப்பிக்கக்கோரியும், தாவ சொத்து விபரத்தில் அயிட்டம் 2 சொத்து தாவா மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள் A,B,C,D என்ற தடமானது வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டவை என விளம்புகை செய்யக்கோரியும், (அதன் தொடர் பரிகாரமாக) தாவா சொத்து விபரத்தில் அயிட்டம் 2 சொத்தில் 1ம் பிரதிவாதியோ அவரை சார்ந்தவர்களோ எவ்வகையிலும் இடையூறு செய்ய கூடாது என ஒரு நிலைக்கால

உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும், 1ம் பிரதிவாதிக்கு 2முதல் 4 பிரதிவாதிகள்கள்குள் அலுவலகத்தில் சட்டத்திற்கு புறம்பாக எற்தவொரு வருவாய் ஆவணங்களும் வழங்க கூடாது என ஒரு நிலைக்கால உறுத்துக்கட்டளை வழங்கக்கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை பிரதிவாதிகளை செலுத்தி வைக்கக்கோரியும் வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff No.1 to No3. are not present and no representation on the side of plaintiff . Already sufficient time has been granted. Plaintiffs are called absent and the suit is dismissed for default No costs.

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் நாள் செவ்வாய்க்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2025.03.11 13:17:30 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.